**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 003/2022** **நாள்: 13.06.2022**

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' – லாவோட்சே**

## என் பாசத்துக்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.**

மாற்றம் பற்றிய அறிவிப்பை சுமந்து வருகிறது இந்தச் சுற்றுமடல்
நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்
வந்து செல்வது மாற்றம்தான்.
யாருமே தடுத்து நிறுத்த முடியாத ஒன்று மாற்றம்.
மாற்றத்திற்கு உட்படாத எதுவும் இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை.
ஆயினும் மாற்றம் நமக்கு ஏற்றுக்கொள்ளக் கடினமாக இருக்கிறது.

பரிணாம வளர்ச்சியில் எழுதலும், வீழ்தலும், விரிவடைதலும்
சுருங்குதலும் இயல்பாக நடப்பது இந்த மாற்றத்தினால்தான்.
நாமும் இந்த இயற்கை விதிக்கு உட்பட்டவர்கள் என்ற
உண்மையை உணரும்போது மாற்றம் நமக்கு இயல்பானதாக மாறும்
இந்த இயற்கை விதிக்கு மாறாக ஏதாவதொன்றை
நாம் கெட்டியாகப் பற்றிக்கொள்ளும்போதுதான்
நமக்கும் சிக்கல்கள் தோன்றுகின்றன.

**துறவிகளாகிய நமக்கு**
**மாற்றம் பல காலம் பழக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும்**
**இப்போதும் மாற்றம் கடினமாகவே இருக்கிறது.**
எங்கு சென்றாலும் Pocket Money -யும் Budget -உம் ஒன்றுதானே என்று
மாற்றத்தை எளிதாக ஏற்றுக்கொள்வோரும் உண்டு.
தன்னை மாற்றியதற்காக பெருந்தலைவர்களைத் திட்டித்தீர்ப்போரும் உண்டு.
எல்லாமே காலத்தால் மாறிப்போகும்.
**மாற்றத்தை இயல்பாக எடுத்துக்கொண்டு**
**மன அமைதியோடு வாழ உங்களை அன்போடு வேண்டுகிறேன்.**

**மாற்றம் பற்றிய சில செய்திகள்:**

மாற்றத்திற்கு மனதைப் பக்குவப்படுத்துவதற்காகவே
பல சமயங்களில் உங்களைக் கலந்தாலோசிக்கிறோம்.

கலந்தாலோசிப்பதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு
தாங்கள் விரும்பும் இடங்களில் இருப்பதற்குத்
தங்களால் ஆன முயற்சி செய்வது
**நாம் ஏற்றுக் கொண்ட கீழ்ப்படிதல் வார்த்தைப்பாட்டிற்கு உகந்ததா?** என யோசிக்க வேண்டும்.

- ❖ ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். **கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடு கொடுத்த நம்மை கலந்தாலோசிப்பது சலுகையே தவிர உரிமை என்று எடுத்துக்கொள்ளக் கூடாது**. நமது வார்த்தைப்பாடுகளைப் புரிந்துகொண்டால் மாற்றத்தை ஏற்றுக்கொள்வது எளிதானது.

- ❖ **மாற்றம் இரகசியம் அல்ல.** சிலர் மாற்றம் பற்றிய செய்திகளை எல்லோருக்கும் தெரிகிறதே என வருத்தப்படுகிறார்கள். யாருக்கும் தெரியாமல் இருக்கும் செய்திதான் இரகசியம். பலரைக் கலந்தாலோசிக்கும்போது செய்தியைக் கசிய விடுகிறோம். சிலருக்கு செய்தியை சொல்லாவிட்டால் தூக்கம் வராது. சிலருக்குத் தன் கற்பனையில் உதிக்கும் செய்திகளைப் பரப்பாவிட்டால் சாப்பாடு இறங்காது. அதனால் வதந்திகளோடும் செய்திகளோடும் வாழ நாம் பழகிக்கொள்வோம்.

- ❖ **மாற்றப்பட்டியல் பெருந்தலைவர்களால் கொடுக்கப்படும் சட்ட ஆணை. எனவே அதற்குக் கீழ்ப்படிவது நமது கட்டாயக் கடமை. எனவே கண்டிப்பாக மாற்றத்தை ஏற்றுக் கொள்வோம்.**

**நமது 9 -வது மாநிலப் பேரவைகள் ஏற்படுத்திய மாற்றங்கள்:**

நமது சென்னை, திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் மாநிலங்களில் 2022 மே 11, 12; 13, 14; மற்றும் 15, 16 ஆகிய நாட்களில் நடந்த 9 - வது மாநிலப் பேரவைகளில், தேர்தலின் வழி புதிய மாநில ஆட்சிமுறைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இச்சுற்றுமடல் வழி அதிகாரப்பூர்வமாக நமது மாநிலங்களின் ஆட்சிமுறைக் குழுவை அறிவிக்கிறோம்.

***<u>சென்னை மாநில ஆட்சிமுறைக் குழுவினர்:</u>***

| | |
|---|---|
| **மாநிலத் தலைமைச் சகோதரி** | - சகோ. ஜீலியட் (956) |
| **மாநிலத் துணைத்தலைமைச் சகோதரி** | - சகோ. ஜெரார்டு லூசியா ஜாக்குலின் (859) |
| **மாநிலச் செயலர்** | - சகோ. ஜெசிந்தா விக்டோரியா (784) |
| **மாநில ஆலோசகர்** | - சகோ. அடைக்கல அமல கிரேசி (1125) |
| **மாநில நிதியாளர்** | - சகோ. அமுல் செல்வி (1180) |

***<u>திண்டுக்கல் மாநில ஆட்சிமுறைக் குழுவினர்:</u>***

| | |
|---|---|
| **மாநிலத் தலைமைச் சகோதரி** | - சகோ. பவுலின் பாத்திமா (989) |
| **மாநிலத் துணைத் தலைமைச் சகோதரி** | - சகோ. கஸ்பார் ஆரோக்கிய மேரி (957) |
| **மாநிலச் செயலர்** | - சகோ. விக்டோரியா மேரி (829) |
| **மாநில ஆலோசகர்** | - சகோ. மரிய கேத்தரின் (1060) |
| **மாநில நிதியாளர்** | - சகோ. குழந்தை மேரி (837) |

***தஞ்சை மாநில ஆட்சிமுறைக் குழுவினர்:***

| | |
|---|---|
| **மாநிலத் தலைமைச் சகோதரி** | - சகோ. ஜெசிந்தா மேரி (984) |
| **மாநிலத் துணைத் தலைமைச் சகோதரி** | - சகோ. செபஸ்தியம்மாள் (879) |
| **மாநிலச் செயலர்** | - சகோ. மரிய பூங்கோதை (1016) |
| **மாநில ஆலோசகர்** | - சகோ. லியோனா அமலி (941) |
| **மாநில நிதியாளர்** | - சகோ. செபஸ்தியம்மாள் (1158) |

**புதிய பணித்தளங்களில் பணி ஏற்பு:**

- உங்களின் மாற்றத்தை ஏற்றுக் கொண்டு **2022 ஜீன் 21 -ஆம் நாள் உங்களின் தற்போதைய பணித்தளங்களிலிருந்து புறப்பட்டு ஜீன் 22 ஆம் நாள் முற்பகல் புதிய பணித்தளங்களில் பணி ஏற்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.**

- **மாற்றலாகிச் செல்பவர்கள் தங்களின் பொறுப்பில் உள்ள கணக்குகளை முடித்து கையிருப்புக்களை ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டும். அதோடு தங்களின் பணி சம்மந்தமான ஆவணங்கள், பதிவேடுகள், கோப்புகள், தஸ்தாவேஜ்களை உரிய முறையில் குறைச் சொல்லுக்கு இடமில்லாமல் ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

***புதிய கல்வியாண்டு தொடக்கம்.:***

- இன்று நமது கல்வி நிறுவனங்கள் புதிய கல்வியாண்டுக்காகத் திறக்கப்படுகின்றன. இன்றைய சூழலில் கல்விப் பணியில் இறையருள் இருந்தால் மட்டுமே நம்மால் பணிகளை ஆற்ற முடியும் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே **உங்களின் கல்விப்பணியை ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் ஆற்றவும் எல்லாச் சூழல்களிலும் நம்பிக்கையோடிருக்கவும் ஆண்டவரின் அருள் அன்னைமரியாளின் உடனிருப்பு உங்களுக்கு அபரிமிதமாகக் கிடைக்கிறது என்ற நற்செய்தி சொல்லி உங்களை வாழ்த்தி உங்களுக்காக செபிக்கிறேன்.**

**<u>BUDGET பற்றி:</u>**

நமது Budget பற்றி ஏற்கனவே கடந்த சுற்றுமடலில் தங்களுக்குத் தெரியப்படுத்தி யிருக்கிறோம். **உங்கள் குழுமத்திற்கான Budget - இன் break up model இத்துடன் அனுப்பப்படுகிறது**. உங்கள் இல்லங்களின் தேவையைப் பொறுத்து நீங்கள் இதில் மாற்றம் செய்து கொள்ளலாம்.

- ✓ இல்லத்தின் சமையல் பணியாளர் முழுநேரமாக இருந்தால், உணவும் தங்குமிடமும் கொடுத்து ரூ.10,000 சம்பளமாகக் கொடுக்க வேண்டும்.

- ✓ பெரும்பாலான இடங்களில் காலையில் வந்துவிட்டு மாலையில் செல்பவர்களாக இருந்தால் உங்கள் இல்லத்தில் முடிவு செய்து அவர்கள் வேலை செய்யும் நேரத்திற்கேற்ப ஊதியம் வழங்குங்கள். இதில் குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

- ✓ இரண்டு ஆண்டுகள் முடித்த பணியாளர்களுக்கு கண்டிப்பாக increment கொடுக்கப்பட வேண்டும்.

- ✓ உங்கள் நிறுவனங்களின் Budget -க்காக உங்கள் மாநிலத் தலைமைச் சகோதரிகள் Form அனுப்புவார்கள். அதனைப் பயன்படுத்திக்கொள்ளவும்.

- ✓ நீங்கள் பணித்தளங்களில் பணி ஏற்றபின் உடனடியாக Budget தயார் செய்து உங்களின் பெருந்தலைவர்களுக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன். தயாரிக்கப்பட்ட உங்களின் Budget ஜீலை 7 -ஆம் தேதிக்குள் வந்து சேர வேண்டும்.

**நாம் எங்குச் சென்றாலும் ஆண்டவரும் அன்னை மரியாவும் கூடவே வருகிறார்கள்.**
**ஒருபோதும் நம்மைக் கைவிடாத இந்த உறவுகளைத் தவிர வேறு எதுவும் முக்கியமில்லை**
**என உணர்ந்தால் மாற்றமும் சூரிய உதயத்தின் வெளிச்சம் போல மனதிற்கு வெளிச்சம் தரும்.**

**என் அன்பும் செபமும் என்றும் உங்களுக்கு உண்டு!!!**

**பிரபஞ்சப் பேரன்பில்,**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**